## OCTOBER - 1999

**[KA 510]**

**M.D. (Siddha) DEGREE EXAMINATION.**

**(New Regulations)**

**First Year**

**Branch V — Noi Nadal**

**Paper I — SIDDHA MARUTHUVA ADIPADAI THATHUVAM**

**Time : Three hours** **Maximum : 100 marks**

1. அடிப்படை விதிகளின்படி சித்தர் மருந்துகளை செய்யும் விதத்தினை நோய் ஆராய்ச்சியில் ஒப்பிடுக. (20)

2. தோற்ற ஒடுக்கத்தில் பந்த நிவர்த்தியை உணர்த்துக. (10)

3. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைத் தேடிக் கொள்ளும் வழியினையும் அதற்கு தடையான காரணங்களையும் சித்த மருத்துவத்தின் அடிப்படையில் விளக்குக. (20)

4. யோகக்காட்சி வேதனைக் காட்சி — இரண்டையும் அளவையின் அடிப்படையில் உதாரணத்துடன் விளக்குக. (15)

5. "உயிராக தேதடா உடம்பா வதேதடா

உயிரினால் உடம்புதான் எடுத்த உண்மை" — இந்த வரிகள் உணர்த்துவனவற்றை விவரித்து எழுதுக? (15)

6 "நெல்லிற்கு உமியும் நிகழ்செம் பினிற்களிம்புஞ்

அலர்சோகஞ் செய்கமத் தாம்" — என்ற சிவஞான போதபாடல் உணர்த்தும் தன்மையை விரிவாக விவரி. (20)

## APRIL - 2000

**[KB 510]**

**M.D. (SIDDHA) DEGREE EXAMINATION.**

**New Regulations**

**Branch V — Noi Nadal**

**Branch VI — Nanju Noolum Maruthuva Neethi Noolum**

**Paper I — SIDDHA MARUTHUVA ADIPADAI THATHUVAM**

**Time : Three hours** **Maximum : 100 marks**

1. (அ) புலிப்பாணி ஜோதிடம்–300ன் மூலம் நோய்களின் தொடர்பை எங்ஙனம் கண்டறிவீர்? (15)

   (ஆ) ஜோதிடமும், மருத்துவமும் என்ற நூலில் சுர்த்திளைப் பற்றி எங்ஙனம் குறிப்பிடப்பட்டுள்ளது? (10)

2. தமிழர் விழாக்களின் மூலம் நோய் நீக்கும் முறைகளை எங்ஙனம் கடைபிடித்தனர் என்பதனை விளக்கமாக எழுது. (20)

3. மருத்துவன் இலக்கணத்தை நூலாய்வு, பயிற்சி, உடை இவைகள் எங்ஙனம் விளக்குகின்றன? (10)

4. திரவப் பொருளின் தோற்றத்தை ஆய்வு செய்க. (10)

5. கைவல்ய நவநீதம், கடைப்பிள்ளை கலைஞானம், மணி மந்திர வைத்திய சேகரம் என்ற நூல்களில் நோய்க்கும் உடல் தத்துவத்திற்கும் உள்ள தொடர்பை தொகுக்க. (20)

6. தாண்டவம் எனும் விளையாட்டு எதனை குறிப்பிடுகிறது? அவ்விளையாட்டு மூலம் நீவிர் அறிவது என்ன? (15)

**OCTOBER - 2000**

**[KC 510]**

**M.D. (SIDDHA) DEGREE EXAMINATION**

**New Regulations**

**First Year**

**Branch V — Noi Nadal**

**Branch VI — Nanju Noolum Maruthuva Neethi Noolum**

**Paper I — SIDDHA MARUTHUVA ADIPADAI THATHUVAM**

Time : Three hours | Maximum : 100 marks

**Answer ALL questions.**

1 "நாலொரு கோடியே நாற்பத் தொன்னாயிர
மேலுமோ ரைந்நூறு வேறா யடங்கிடும்

.......... ஐயைந்து ளாகுங் குறிக்கிலே"

— என்ற பாடலின் வாயிலாய் உயிர் சக்தியை அறிவது எங்ஙனம்? (20)

2. பிரணவம் என்னும் ஓங்காரத்தில் அகாரம், உகாரம், மகாரம், நகாரம், சிகாரம் எங்ஙனம் அடங்கியுள்ளது என்பதை நிஜானந்த போகத்தின் மூலம் விளக்குக. (15)

3. சித்தரின் கண்மணி — விளக்குக (20)

4 "ஆதியில்லை அந்தமில்லை ஆனநாலு வேதமில்லை

ஆதிகண்டு கொண்ட பின் ஐந்தெழுத்து மில்லையே"

என்ற பாடலின் மூலம் ஆசிரியர் எதனை விளக்குகிறார். (20)

5. சுப்பிரமணிய பாரதியார் கலைமகள் தோத்திரம் வாயிலாக அணுவின் பெருமையை எங்ஙனம் கூறுகிறார்? (10)

6. ஒரு விந்தை என்ற தலைப்பின் மூலம் தோற்றத்தின் அடிப்படைத் தத்துவத்தை சித்த மருத்துவர் எங்ஙனம் உணர்வர்? (15)